## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 32/2021

நாள் 07.10.2025

PW1 – தெய்வாத்தாள்

க/பெ – காளியப்ப கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of October 2025)**

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு ஆதார் அடையாள அட்டை உள்ளது. அதை தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் படிக்கவில்லை. எனக்கு தற்போது 55 வயதாகிறது. எனது வயதை நிரூபிக்கும் வகையில் அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி 4 ஆண்டுகள் கழித்து தான் முதல் பெண் குழந்தை அவிநாசி பாலச்சந்தர் மருத்துவமனையில் பிறந்தது என்றால் சரிதான், அந்த குழந்தை பிறந்த உடனே இறந்து விட்டது. அதற்கு பிறகு எனக்கு இரண்டாவதாக பெண் குழந்தை 1989–ம் ஆண்டில் பிறந்தது என்றால் சரிதான். அதற்கு பிறகு 1 வருடம் கழித்து ஒரு ஆண் குழந்தை பிறந்தது. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதை காட்ட அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 15.02.1973–ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையானது சிவகுருநாத கவுண்டர், முருகப்ப கவுண்டர், ராமசாமி மற்றும் எனது தாத்தா கந்தப்ப கவுண்டருக்கும் இடையே ஏற்பட்டது.

2. மேற்படி வீதம் பாகப்பிரிவினை ஏற்பட்ட பிறகு எனது அப்பாவிற்கு வந்த சொத்தில் நான் இதுநாள் வரையில் பாகப்பிரிவினை எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் கூட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பாகம் கேட்டு வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். எனது அப்பா எனது தம்பி 2–ம் பிரதிவாதி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றால், தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரிந்திருந்தும், இந்த வழக்கிற்காக வேண்டி தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் ஏற்பட்ட விபரம் தெரிந்து 10 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவான 1–ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரது மகனான 2–ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்து விட்ட நிலையில் அந்த சொத்தில் நான் சட்டப்படி பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. அதனால், நான் தாவாவில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. அதனால் தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.10.07 14:35:23 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**